மதிய உணவாக
குசியிக்க நாடில்ஸ் வகைகள்
றிக்கோ
கோப்பியை அரைத்துப்
பெற்றுக்கொள்ள
செந்தாமரை
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பாலூதா சர்பத்
★ மிக்ஸ் புருட் ஜுஸ்கும்
செந்தாமரை
குளிர் தடாகம்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 07 சனிக்கிழமை (21 - 05 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 174

# சீதனக் கொடுமையை ஒழிப்பதற்குச் சட்டம்;
# அதற்கு முன் மக்கள் கருத்து கணிக்கப்படும்

## வடமராட்சியில் பிரங்கித் தாக்கு

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வடமராட்சி கடற்பகுதிக்கு வந்த கடற்படை படகுகள் பீரங்கித் தாக்குதலை நடத்தின.

இதனை அடுத்து 9.00மணி முதல் பலாலி முகாமில் இருந்து வடமராட்சிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (இ-3)

## இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 21

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமைவழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

### மூச்சந்தி முரளி



சிப்பாய்களிடமிருந்து தொற்றிய நோயாக இருக்கலாம் பாருங்கோ...!

## பெண் அடிமைத்தனத்தை போக்க மக்கள் உதவியைக் கேட்கின்றனர் புலிகள்

யாழ்ப்பாணம், மே 21

தமிழீழ மக்களின் பெரும் சமூகப் பிரச்சினையான சீதனக் கொடுமையை ஒழித்துக் கட்டுவதற்கான சட்டம் ஒன்றைத் தயாரித்து, அதனைச் செயற்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கு முன்னர், சீதனக் கொடுமையை ஒழிப்பது குறித்து மக்களின் கருத்தைக் கணிப்பெடுக்க ஏற்பாடாகி இருக்கிறது.

மக்களுடன் இது குறித்து கலந்தாலோசனை செய்வதற்கான பிரசார இயக்கம் ஆரம்பமாகிவிட்டது.

முற்போக்கான இம்முயற்சிக்கு மக்கள் கைகொடுத்து உதவ பேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில் கோரியுள்ளது.

அரசியல்துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ மக்கள் மத்தியில் ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள சீதனக் கொடுமையை ஒழித்துக்கட்ட விடுதலைப்புலிகள் இயக்கம் முடிவெடுத்திருக்கிறது. இந்த நோக்கில், சீதன ஒழிப்பு சட்டம் ஒன்றைத் தயாரித்து, அதனை செம்மையாக செயல்படுத்தவும் புலிகள் இயக்கம் தீர்மானித்திருக்கிறது.

சீதன ஒழிப்பிற்கான சட்ட வாக்கம், மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர். இந்தச் சிக்கலான பிரச்சினை குறித்து மக்களுடன் கலந்தாலோசனை நிகழ்த்தி, மக்களின் கருத்துக்களை கணிப்பெடுக்கும் நோக்குடன் வெகுசனப் பிரசார இயக்கம் ஒன்றையும் விடுதலைப்புலிகள் ஆரம்பித்துள்ளனர்.

சீதனப் பிரச்சினையின் தன்மைகள் அதனை ஒழித்துக் கட்டுவதற்கான வழிமுறைகள், சீதன ஒழிப்புச் சட்டத்தில் எழக்கூடிய சிக்கல்கள் அவற்றை எதிர்கொள்ளும் மார்க்கங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து

(2 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை அதிகாரி யாழ். வருகை

அடுத்தமாதம் 2 ஆம் திகதி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரியாக பதவியேற்கவிருக்கும் மேரி பேர்க்கின்ஸ் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

தற்சமயம் யாழ் அலுவலக அதிகாரியாக கடமையாற்றும் திரு. செற்றிக் பிரலாவின் இடத்துக்கே இவர் நியமனம் பெற்றுள்ளார். (இ-3)

# இந்தியாவின் உதவியை பெறுவதே காமினி நியமனத்தின் பின்னணி!

## தென்னிலங்கைப் பத்திரிகை செய்தி

கொழும்பு, மே 21

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை மீண்டும் அமுல் செய்வதற்கு உதவுமாறு இந்தியாவை இலங்கை கோரும் என்றும்—

இதற்காகவே இந்திய ஆதரவாளரான காமினி திஸநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளார் என்றும்—

தென்னிலங்கைப் பத்திரிகையான ''யுக்திய'' செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டில் நடைபெறும் வன்முறையை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக தனது நெருங்கிய சகாக்களுடன் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஆலோசனை நடத்திய போது இந்திய உதவி பெறும் திட்டம் முன்வைக்கப்பட்டதாகவும்—

ஜனாதிபதி அதற்கு இணக்கம் தெரிவித்தார் என்றும்—அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

காமினி திஸநாயக்காவுக்கு அரசில் பொறுப்பு வாய்ந்த பதவி ஒன்றை வழங்கிய பின்னர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தற்போது இருந்து வரும் சிக்கல்கள் தீர்க்கப்படும் என்றும்—

அதன் பின்னர் இரு தரப்பினரும் நெருங்கிச் செயற்பட திட்டமிடப் பட்டுள்ளதாகவும் ''யுக்திய'' மேலும் தெரிவிக்கிறது.

அடுத்த நான்கு மாதகாலத்துக்குள் இத்திட்டத்தை அமுல் செய்வதன் மூலம் எதிர்வரும் தேர்தலில் தோல்விகளில் இருந்தும் தப்பிவிட முடியும் என்று அரசு கருதுவதாகவும் ''யுக்திய'' தெரிவிக்கிறது. (இ-9)

## செஞ்சிலுவை அதிகாரி பிரிகேடியருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 21

யாழ். மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக வடபகுதி இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஜெயவர்த்தனாவுக்கும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி திரு. செற்றிக் பிரலாவுக்கும் இடையில் நேற்று முன்தினம் பலாலியில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

யாழ். மாவட்டத்தில், குடியிருப்புப் பகுதிகளில் நடத்தப்படும் ஷெல் தாக்குதல்கள் குறித்தும்—

கடற்றொழிலுக்கு செல்லும் மீனவர்கள் மீது கடற்படையினர் நடத்தும் தாக்குதல்கள் குறித்தும்—

யாழ். ஆஸ்பத்திரிக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்தும் — இப்பேச்சுக்களின் போது ஆராயப்பட்டதாகத் தெரிய வந்தது.

தமது பேச்சுக்கள் பலன் அளிக்கத்தக்கவகையில் அமைந்ததாக திரு செற்றிக் பிரலா தெரிவித்தார்.

## ஜெரி டி சில்வாவை ஓரங்கட்ட அரச உயர்மட்டத்தில் முயற்சி

### ஹமில்டனின் பதவியும் பறிபோகலாம்

கொழும்பு, மே 21

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவை ஓரங்கட்டும் நடவடிக்கைகள் அரசாங்க உயர்மட்டத்தில் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது

ராவய சிங்கள பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவியில் உள்ள ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவை அகற்றிவிட்டு அப்பதவிக்கு, பதவி விலகிய இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரத்னாவை நியமிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜெரி டி சில்வாவை ஓரங்கட்டும் முயற்சிக்கு முன்னோடியாக — வடக்கு - கிழக்கு யுத்தத்தில் எதுவித முன்னேற்றத்தையும் காணவில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாகவும் —

வடக்கு - கிழக்கு இராணுவத்தினர் மத்தியில் ஜெரி டி சில்வாவுக்கு நல்ல பெயர் இல்லை என்றும் சொல்லப்படுகின்றது.

ஆனால் ஜெரி டி சில்வாவை ஓரங்கட்ட அரசு முயற்சிப்பதற்கு பிரதான காரணம் அவர் பௌத்த மதத்தவர் அல்லர் என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுவதாக அப்பத்திரிகைச் செய்தியில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. [இ-எ]

## கைதான மீனவர்கள் நால்வர் பலாலியில்

யாழ்ப்பாணம், மே 21

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்கள் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை பலாலிக்கு சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. செற்றிக் பிரலா படை அதிகாரிகளுடன் மீனவர் பிரச்சினை குறித்து பேச்சு நடத்தினார்.

அப்பொதே நான்கு மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து தெரிய வந்தது.

அந்த மீனவர்களை பார்வையிட்டு அவர்களின் நலன்களையும் அவர் கேட்டறிந்தார்.

அத்துடன் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனையோரையும் அவர் சந்தித்தார். (இ-3)

## மலையகப் பிரச்சினையை மாகாணசபை தீர்க்காது

### சந்திரசேகரம் கூறுகிறார்

கொழும்பு, மே 21

மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு மாகாண சபை மூலம் தீர்வு காணமுடியும் என்று நான் ஒரு போதும் கூறியதே இல்லை; இனிக் கூறப் போவதுமில்லை.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான பெ. சந்திரசேகரம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

மலையக மக்களின் பிரச்சினைகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் எட்டுவதற்கு தான் மாகாணசபையைப் பயன்படுத்தப் போவதாகவும் அவர் கூறினார். (இ-எ)

## கைதாகிய பாதாள உலக தலைவர்கள் குறித்து இதுவரை விசாரணை இல்லை

கொழும்பு, மே 21

'பாதாள உலக'த் தலைவர்கள் சிலர் கைதாகி ஒருவாரமாகியும் அவர்கள் செய்ததாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் குறித்து முறையான, நேர்மையான விசாரணைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இப்படி பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த நபர்களை விசாரிப்பதற்கு அதிக அதிகாரங்களைப் பெற்று இருந்தும்—

இதுவரை நடைபெற்ற விசாரணைகளில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இத்தகைய சந்தேக நபர்களை விசாரிப்பது தேசிய புலனாய்வுப் பிரிவில் உள்ள அனுபவமிக்க பொலீஸ் அதிகாரிகளின் கடமையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தற்போது அந்த நபர்களை விசாரிப்பவர்கள் பாதாள உலகத்துடன் தொடர்பு கொண்ட பொலீஸ் அதிகாரிகள் என்றும் கூறப்படுகிறது.

'பாதாள உலகத்' தலைவர்களின் அபிமானிகள் என்று கருதப்படும் பொலீஸாரிடம் இவ்விசாரணையை பொலீஸ்மா அதிபர் ஒப்படைத்திருப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குமாரை அழைத்துவரும் திட்டம் கைவிடப்பட்டது?

யாழ்ப்பாண நிலைவரங்களை நேரில் அறிந்து கொள்வதற்காக தென்னிலங்கையைச் சேர்ந்த 100 பௌத்த பிக்குமாரை அங்கு அழைத்துச்செல்ல சர்வோதய இயக்கம் எடுத்த முயற்சி கைவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. —

கொழும்பு தமிழ் தினசரி ஒன்று இத்தகவலை தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது.

[illegible] இத்திட்டம் கைவிடப்பட்டதுக்குக் காரணம் என்று அச்செய்தியில் மேலும் [illegible] (இ-5)

## அ. தி. மு. க வுக்கு ஆதரவான காங்கிரஸ் எம். எல். ஏ கட்சியிலிருந்து நீக்கம்

சென்னை, மே 21

தமிழ்நாட்டில் அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் இரண்டு சட்டசபைத் தொகுதிகளின் இடைத் தேர்தல்களில் அ. தி. மு. க. வேட்பாளர்களுக்காக பிரசாரஞ் செய்துவந்த காரணத்துக்காக இந்திரா காங்கிரஸின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து காங்கிரஸ் எம்.எல்.ஏ. செல்வராஜ் வெளியேற்றப்பட்டார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி இத்தகவலை வெளியிட்டார். (இ-எ)

## வரவு செலவுத் திட்டம் 95 பெப்ரவரியில்

### இவ்வாண்டு கணக்கு அறிக்கை மட்டும்

கொழும்பு, மே 21

1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக, அரசின் இடைக்கால செலவினங்களுக்காக அன்றாடக் கணக்கு அறிக்கை ஒன்றை அரசாங்கம் இவ்வாண்டின் இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நடாளுமன்றத்தில் அண்மையில் நடந்த விவாதத்தின் போது அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா இத்தகவலை வெளியிட்டார்.

அப்போது சுதந்திரக்கட்சி எம்பி தர்மசிறி சேனநாயக்கா குறுக்கிட்டு, ''புதிய வரவு

(6ஆம் பக்கம் பார்க்க)

## ரூ. 10 கோடி நட்டஈடு கோரி கூரே வழக்கு

கொழும்பு, மே 21

அமைச்சர் சிறிசேன கூரே பத்துக்கோடி ரூபா நட்டஈடு கோரி, தமது சட்டத்தரணி மூலம் ராவய ஆசிரியருக்கு நோட்டீஸ் அனுப்பி வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது

அரசாங்கத்தைக் கவிழ்க்க மேஜர் ஜெனரல் வக்கி அல்லமவுடன் சேர்ந்து அமைச்சர் கூரே சதி செய்ததாக ராவய வெளியிட்ட செய்தி தொடர்பாகவே இந்த நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## மதம் கொண்ட யானையால் கிழக்கில் 5 தமிழர்கள் பலி

யாழ்ப்பாணம், மே 21

அம்பாறையில் காஞ்சிரங்குடா, தாண்டியடி, பொத்தானைப் பிரதேசங்களில் மதங்கொண்ட யானை ஒன்றின் தாக்குதலுக்குள்ள இ ஐந்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இம்மதம் பிடித்த யானையை தாம் கொல்வதானால் அதற்குமுன் அது 100 தமிழர்களையாவது கொல்லவேண்டும் என ஸ்ரீலங்கா பொலிஸ் அதிரடிப் படையினர் மக்களிடம் கூறியுள்ளனராம்.

இதேவேளை — மிதிவெடியில் அகப்பட்டு காலில் காயப்பட்ட யானை ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபா செலவில் அதிரடிப் படையினர் மருத்துவ சிகிச்சை அளித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## பொன்னாலைக் கடலில் மீனவர் மீது தாக்குதல்!

### ஒருவர் பலி; கட்டுமரம் சிதறியது

யாழ்ப்பாணம், மே 21

பொன்னாலை நெல்லியான் கடற்பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலின் போது ஒருவர் மரணமானார். கட்டுமரம் ஒன்று சிதறியது.

இச்சம்பவம் நேற்று மாலை 4.30 மணிக்கு இடம்பெற்றது.

சம்பவத்தில் சுழிபுரம், நாத்தடியைச் சேர்ந்த ஆறுமுகம் நவரத்தினம் (வயது40) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

மரணமானவருடன் தொழிலுக்குச் சென்று உயிர் தப்பி வந்தவர்களில் ஒருவரான சுப்பிரமணியம் நாகரத்தினம் என்பவர் சம்பவம் குறித்து தெரிவிக்கையில், ''நேற்று

[6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று மூடப்பட்டிருக்கும்

அனைத்து குடும்ப அட்டை பகுதிச் செயலகங்களும் இன்று மூடப்பட்டிருக்கும் என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு குடும்ப அட்டைப் பகுதியினர் அறியத்தருகின்றனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின்
# வருடாந்த வைகாசிப் பெருவிழா

இடம்: ஸ்ரீசெல்வச் சந்நிதி ஆலய முன்றில்
காலம்: **22 - 05 - 94** ஞாயிறு
நேரம்: காலை 8 மணி - மாலை 5 மணி வரை

மங்கள இசை:
இசைத்தென்றல் எம். எஸ். ஜெயநாதன் குழுவினர்

தலைவர்:
திரு. க. திருப்பெருங்குமாரநாதன் அவர்கள்

வரவேற்புரை:
திரு. ந. அனந்தராஜ் அவர்கள்
(அதிபர் யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)

ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனம்)
திரு: வே. முருகேச சுவாமிகள்
பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்
(பிரதமகுரு வல்வை வைத்தீஸ்வர தேவஸ்தானம்)

முதன்மை விருந்தினர்:
Dr. சி. கதிரவேற்பிள்ளை
(மாவட்ட வைத்திய அதிகாரி, ஆதார வைத்திய சாலை, பருத்தித்துறை)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. சி. முருகேசம்பிள்ளை
(ஓய்வு பெற்ற பிரதேச செயலர்)
திரு: செல்லமுத்து ஸ்ரீநிவாசன்
(பிரதேச செயலர், கரவெட்டி)

வாழ்த்துரை:
சோ. தண்டபாணித் தேசிகர்
(பிரதமகுரு வல்லவ ஸ்ரீமுத்துமாரியம்மன் - தேவஸ்தானம்)

### உரை அரங்கம்

| நிகழ்த்துவோர் | விடயம் |
|---|---|
| கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் (தலைவர், இந்துநாகரிகத் துறை-யாழ். பல்கலைக் கழகம்) | "நாவலர் வழியில் சைவம்" |
| திருமதி செல்வநாயகம் நாச்சியார் (சிரேஷ்ட விரிவுரையாளர்- யாழ். பல்கலைக்கழகம்) | "சந்நிதி வழிபாட்டு முறை" |

சிறப்புரை:
திரு. ந. யோகசிவாமணி அவர்கள்
(மாவட்ட நீதிபதி - யாழ்ப்பாணம்)

விருது வழங்கிக் கௌரவித்தல்:
வழங்குபவர்:
ஸ்ரீலஸ்ரீ செ. வி. இராசேந்திரம் ஐயர்
(ஸ்ரீசெல்வச் சந்நிதி தேவஸ்தானம்)

விருது: ஞானபண்டித தமிழ்ச்சுரிசில்
பெறுபவர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழகம்)

பாராட்டுரை:
சிவஸ்ரீ சை. நமசிவாயக் குருக்கள்
(முன்னை ஆசிரியர் இந்துசமயம்)

இன்னிசைக் கச்சேரி,
சங்கீத இரத்தினம்
திருமதி பிரானேஸ்வரி சிதம்பரப்பிள்ளை அவர்கள்
(பக்கவாத்திய சகிதம்)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

குறிப்பு:
விழாவில் பங்குபற்றுவர்கள் அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்படும்.

ந. அரியரத்தினம்,
செயலாளர்.
[80984]



## பயிலுநர் ஆசிரியர் தெரிவு

போட்டிப் பரீட்சைக்கான
### விசேட பயிற்சி வகுப்பு

ஆரம்பம் இன்று **21-05-94**
(பி. ப. 4மணி)

விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

### புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/8229)


## பாடசாலைகளில்

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சன சமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனி பிற்பகல் 1-30 மணிக்கு தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறும். (த-28)

★ ★ ★

புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம், செட்டிதெரு மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம் ஆகியவற்றின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு கிள்ளர் வேலியில் அமைந்துள்ள பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (த)

## சீதனக் கொடுமை......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெறும் நோக்குடனேயே இந்தப் பிரசார இயக்கம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வென்றெடுத்து சீதனக் கொடுமையை ஒழித்துக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதே இந்தப் பிரசார இயக்கத்தின் அடிப்படை நோக்கமாகும்.

தேசிய சுதந்திரப் போராட்டத்துடன் சமூக விடுதலையையும் வென்றெடுப்பதே விடுதலைப்புலிகள் இயக்கத்தின் குறிக்கோளாகும்,

சமூக விடுதலை எனும் பொழுது சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளையும், அநீதிகளையும் நீக்கி, சமத்துவமும், சமநீதியும் கொண்ட புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதைக் குறிப்பதாகும். இதன் அடிப்படையில், விடுதலைப் போராட்ட காலத்தில் சமூக சீரமைப்பை நோக்காகக் கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள புலிகள் இயக்கம் தீர்மானித்திருக்கிறது.

இன்று, தமிழீழ சமூகத்தில் சீதன முறையானது பெண் அடிமைத்தனத்தின் வெளிப்பாடாக ஒரு சமூக அநீதியாக உருவெடுத்திருக்கிறது. இந்தக் கொடுமையால் பெண்ணினம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது. பெண்கள் மட்டுமன்றி, பெண்களைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் உள்ளடங்கியதாக எண்ணற்ற குடும்பங்கள் இப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தத்தில் இப் பிரச்சினையானது, எமது சமூகம் எதிர்கொள்ளும் ஒரு சாபக்கேடாக எமது சமூக வாழ்வை சீரழித்துவருகிறது. இந்தப் பிரச்சினை தொடர்ந்து நீடிக்குமானால் எமது சமூகத்தின் ஒழுங்கமைப்பு சீர்குலைந்து எமது பண்பாட்டு வாழ்வும் சிதைந்துவிடும் பேராபத்தும் எழக்கூடும், எனவே, இப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முறையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவது இந்தக்கால கட்டத்தின் அத்தியாவசிய தேவையாகும்.

சீதனக் கொடுமையானது நீண்ட நெடுங்காலமாக எமது சமூகத்தில் ஆழ வேரூன்றிய ஒரு சிக்கலான பிரச்சினையாகும். இதனை ஒழித்துக்கட்டுவதும் இலகுவான காரியமல்ல. ஆனால் மக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் இருந்தால் இந்த சமூக அநீதியை ஒழித்துக்கட்டுவது சாத்தியமாகும். எனவே, எமது விடுதலை இயக்கம் மேற்கொள்ளவிருக்கும் முற்போக்கான முயற்சிக்கு மக்கள் கைகொடுத்து உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## அன்னை ஸ்ரீசாரதாதேவி புலமைப் பரிசில்

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ நூற்றாண்டு விழாவின் அடையாளமாக 1994ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அன்னை ஸ்ரீசாரதாதேவி புலமைப் பரிசில் பெறும் மாணவர்களின் விவரம்:

| பெறுபவர் | | பாடசாலை |
|---|---|---|
| பா. சவிதா | ஆண்டு 11 | சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம் |
| த. தேனுகா | ஆண்டு 12 | ,, ,, |
| சி. சந்திரலேகா | ஆண்டு 12 | ,, ,, |
| ம. தயாநிதி | ஆண்டு 12 | ,, ,, |
| க. கலைவாணி | ஆண்டு 6 | ,, ,, |
| க. மயூரா | ஆண்டு 7 | ,, ,, |
| செ. ரமேஷ் | ஆண்டு 12 | ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை |
| செ. ராகவன் | ஆண்டு 11 | ,, ,, |
| இ. ராகவன் | ஆண்டு 8 | ,, ,, |
| இ. ஜெரால்ட் | ஆண்டு 12 | ,, ,, |
| சுமணன் | ஆண்டு 7 | சிவப்பிரகாச மகா வித்தியாலயம், பருத்தித்துறை |
| கௌசல்யா - பவரத்தினம் | ஆண்டு 12 | வல்வை மகளிர் மகா வித்தியாலயம் |

சுவாமி சித்ரூபானந்தா ஸ்ரீராமக்கிருஷ்ண-சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.
[சி-8196]



கோண்டாவில் கிழக்கு
## அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானம்
### 7 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

மு.ப. 11 மணிக்கு சந்தான கோபாலர் உற்சவம்
பி. ப. 4.30 மணி பூசைகள் ஆரம்பமாகி 6 மணிக்கு கைலாசவாகனத்தில் முருகப் பெருமான் காட்சிதருவார்.

விசேட கேளிக்கச்சேரி;-
1. சுவாமிநாதன் குழுவினர்
2. கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி குழுவினர்
3. K. நித்தியானந்தன், K. சிவகுமார் ] தவில்

கேதீஸ்வரன் - நாதஸ்வரம்
கதாப்பிரசங்கம் - கந்தபுராணவிரிவுரை
சிவநெறித்தொண்டர் - செ. சத்தியமூர்த்தி (ஆசிரியர்)

### தமிழீழ இசைக்குழுவின் இசைத்தென்றல்

ஒளி அமைப்பு - மனோலைட்
ஒலி அமைப்பு - றோயல் சவுண்ஸ்

- 7 ஆம் திருவிழா உபயகாரர்
(81005)



## யாழ். மாவட்ட சி.க.கூ.ச. சமாசம்
# பதவி வெற்றிடம்

பதவி: **நிதி முகாமையாளர்**
வயது: 25 – 45 வரை
(கூட்டுறவு பணியாளர்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது)

சம்பள அளவுத்திட்டம்: 104 [8]
1305 / 60 X 4 – 2370 / 75 X 11

படிகள்: 300 + 314 + 860 + 481.50 வழங்கப்படும்.

குறிப்பு: யாழ். மாவட்டம் முழுவதும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்கள், விண்ணப்பப்படிவங்கள் ஆகியவற்றுக்கு சமாசக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30 – 05 – 94

தலைவர்
யாழ். மா. சி. க. கூ. ச. சமாசம்
182½, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 8197)


## கண்ணீர் அஞ்சலி

எமது நிலைய பயிற்சி ஆசிரியை
சீ. வள்ளிநாயகியின்
தாயார்
### சீவரத்தினம் காமாட்சி
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

சிரேஷ்ட போதனாசிரியர்,
போதனாசிரியர், பயிற்சி ஆசிரியர்கள்,
தொலைக்கல்வி நிலையம்,
வேலணை.
[31007]

## அறிவித்தல்
### மானிப்பாய் வடகிழக்கு ஆனந்தன் வைரவர் ஆலயம்

மேற்படி ஆலய வருடாந்த உற்சவம் 07-05-1994 சனிக்கிழமையுடன் பூர்த்தியானது. 08-05-1994 ஆம் திகதிய உதயனில் பிரசுரமான விளம்பரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டது போல் உற்சவ இறுதிநாள் 08-05-1994 அல்ல என்பதைச் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

ஆலயதர்மகர்த்தா
[81004]

## தவறிவிட்டது

கடந்த 17ஆம் திகதி பருத்தித்துறையைச் சேர்ந்த ஞா. கிரிசாந்தி என்பவரது புதுஉடுப்புடன் பென்சன் வவுச்சர் அடங்கிய தனது பிரயாணப் பையை தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் சாவகச்சேரியை சேர்ந்த பெண்மணி ஒருவரிடம் உதவிகோரிக் கொடுத்து விட்டு காணாமற்போனதால் திரும்ப வாங்கத் தவறி விட்டார். அதனை வாங்கியவர்கள் கே. துரைராசா, 2ஆவது லேன், கச்சாய் றோட், சாவகச்சேரி அல்லது மனோன்மணி இரத்தினசபாபதி, 4ஆம் குறுக்குத் தெரு சந்தி, பருத்தித்துறை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் தரப்படும்.
(30994)


கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
# நிதி உதவிக் கலைவிழா

இடம்:- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
காலம்:- 21-5 94 பி.ப 6 30
இசை:- சுகுமார் குழுவினர்
நடனம்:- மயில் நடனம்
நாடகம்:- S.K. தங்கவடிவேல் அவர்களின்
### "மலராத மொட்டுக்கள்"

பழைய மாணவர் சங்கம்

★ பி. ப. 2 மணிக்காட்சி ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

விளம்பர அன்பளிப்பு:-
### சைன் மனைஇயல் அகம், கெயின்ஸ் கல்வி நிலையம்
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி முன்பாக
(31001)



## வெளிவந்து விட்டது!!
### வெப்ப இரசாயன நுட்பங்கள்
(க. பொ. த. உயர்தர வகுப்பிற்குரியது)

**T. NAGARATNAM** B Sc. (Ceylon)

பல வருடங்களாக இரசாயனத்தில் விசேட சித்தி பெற்று பல்கலைக்கழகம் புகுந்த மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஆசிரியரின் உன்னத வெளியீடு. பல அரிய நுட்பங்களை உள்ளடக்கியது.

சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

# 'A' LEVEL CENTRE
1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-8223]


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி






| அமரர் **இராசையா மகாலிங்கம்** | திருமதி **சிவபாக்கியம் மகாலிங்கம்** | செல்வி **மதனகலா மகாலிங்கம்** | அமரர் **சபாரட்ணம் சுபாஸ் சந்திரன்** |
|---|---|---|---|
| மண்ணில்: 1930 – 10 – 25 | மண்ணில்: 1933 – 03 – 10 | மண்ணில்: 1972 – 03 – 10 | மண்ணில்: 1948 – 05 – 17 |

விண்ணில்: **10 - 06 - 1992** | திதி: **21 - 05 - 1994**

அப்பா எங்கள் அன்பின் உருவே
ஆண்டு இரண்டு கடந்த போது
எப்போதும் நீர் எங்கள் தெய்வம்
என்றும் மறவோம் இருக்கும் நாளில்
அம்மா நீங்கள் எம்மைப் பிரிந்து
ஆண்டு இரண்டு ஆகிப் போச்சு
இப்மானிலத்தில் இருக்கும் வரையில்
இதயத் தன்னில் இருப்பீர் நீரே.

தங்கை எமது தவிரே மலரே
தங்கத் திருவே மறவோம் உன்னை
பொங்கும் துயரே உன்னை எண்ணில்
பொழுதும் இரவும் பொருள் உன் நினைவே
அத்தான் எமது அக்கா துணையே
அகலா தெங்கள் நெஞ்சம் நினைந்தீர்
நித்தம் உம்மை உம் புதல்வர் உருவில்
நினைந்தே நமது கடமை தொடர்வோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மகன்: ம. குபேந்திரதாஸ் (ரவி), மோகனதாஸ்,
மகள்: சு. சசிகலா, சந்திரகலா.

சகோதரன்: ரவி, மோகனதாஸ்,
சகோதரி: சசிகலா, சந்திரகலா.

மனைவி: சசிகலா-
சுபாஸ் சந்திரன்
பிள்ளைகள்.

ம. குபேந்திரதாஸ் (ரவி),
திருநெல்வேலி.
[சி-8195]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருகோணமலை போன்று

## மட்டக்களப்பிலும் திட்டமிட்ட

# சிங்களக் குடியேற்ற அபாயம்!

கொழும்பு, மே 21

அரசாங்கம் திருகோணமலையில் நடத்திய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைப் போன்று மட்டக்களப்பிலும் நடத்த முயல்கிறது. மட்டக்களப்பு மாவட்ட எம்பி பிரின்ஸ் காசிநாதன் இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இதேவேளை —

யாழ். மாவட்ட எம்பி திரு. நவரத்தினம் பேசுகையில் —

''யுத்தம் தொடருகிறது சமாதானத்தை ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை. யுத்தத்தை பலர் தங்கள் தொழில் லாபத்துக்குப் பயன்படுத்துகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி அரசு தேசிய ரீதியில் சிந்திக்கவில்லை''— என்று சொன்னார்.

ஐ. சோ. முன்னணியைச் சேர்ந்த அத்தாவுட செனிவிரத்தினா பேசுகையில் அரசின் எண்ணம் முழுவதும் எதிர்வரும் தேர்தலில் எப்படி வெற்றி பெறுவது என்பதில் உள்ளதே அன்றி இனப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என்பதில் என்னவும் இல்லை என்றார்.

கம்பஹா மாவட்ட எம்.பி ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பேசுகையில்; அரசுக்குள் பிளவு உண்டு. அவர்களால் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது என்று சொன்னார்.

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 96**

**பௌதீகவியல்:** திரு. கணேசன்

**ஆரம்பம்: 23 - 05 - 94**

(4 மணி)

**A/L 95**

**வெப்பவியல்:**

**ஆரம்பம்: 23 - 05 - 94**

(5 மணி)

(இ/8221)

### விஞ்ஞான பாட ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், மே 21

ஜி.சி.ஈ சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்புகளில், விஞ்ஞான பாடத்தை இலகுவில் மாணவர்களுக்கு கற்பிக்க ஏதுவாக கற்பித்தல் சாதன அட்டவணைகள் (மாதிரிகள் 10) இறக்குமதி செய்யப்பட்டு நல்லூர் கல்விக்கழக நடுவகப் பணியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் —

விஞ்ஞான ஆசிரியர்கள் அவற்றை பார்வையிட்டு தங்கள் கல்லூரித் தேவைகளை எழுத்து மூலம் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

### மோதலில் சிக்கிய சிவிலியன் பலி

கொழும்பு, மே 21

படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த வியாழன்று களுவாஞ்சிக்குடியில் மோதல்சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

அந்தச் சம்பவத்தில் இடையில் அகப்பட்ட சிவிலியன் ஒருவர் பலியானதாக பொலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் களுவாஞ்சிக் குடியைச் சேர்ந்த இளையதம்பி சோமசுந்தரம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. (த-5)

### தமிழ்த் தின போட்டிகள்

தென்மராட்சி, மே 21

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 23ஆம், 25ஆம், 28ஆம் திகதிகளில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

23 ஆம் திகதி பகல் 1மணிக்கு எழுத்தாக்கம், கட்டுரை, சிறுகதை, கவிதை, நாடகப் பிரதியாக்கம் போன்ற போட்டிகள் நடைபெறும். [த-117]

### 46ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மே 21

காங்கேசன்துறை இளந் தமிழர் மன்றத்தின் தமிழ் மகன் பெருவிழாவும் 46ஆவது ஆண்டு விழாவும் இன்றும், நாளையும் இரவு 7 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

விழாவில் கவியரங்கு, சொற்போர், வழக்குரை மன்று, நாடகம், பட்டிமன்றம் ஆகியவையும் இடம் பெறும். (த)

## விஞ்ஞானக் கல்வி நிலையம்

நல்லூர்

**A/L 96**

தூயகணிதம்

ஆசிரியர்:

**P. ஜெயக்குமார்**

சனி, ஞாயிறு 5 p.m.

ஆரம்பம்:

21 - 05 - 94

(இ-8210)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் அருணாசலம் சங்கரலிங்கம்

(முன்னாள் கிராம சேவை அலுவலர்)

தோற்றம்: 05 – 12 – 1944 மறைவு: 20 – 04 – 1994

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு''

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21 - 05 - 1994) கணுக்கேணி மேற்கு, முள்ளியவளையில் நடைபெறும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரன்

திரு. ச. இதயரதன்,
27, சிவகுருநாதன் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [30982]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 20 – 03 – 1940

விண்ணின் பிடியில் 21 – 04 – 1994

### Dr. P. இராசரத்தினம்

(அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி)

வாழ்வினிலே உனை என்றும் மறவேன்

நானிருக்க இளையவனாம் உன்னைக் காலன்
நடத்தியே சென்று விட்டான் அந்தோ தம்பி
தேனிருக்கும் மொழிபேசிப் பாசம் காட்டித்
தேடரிய அன்பினை நீ செய்து போனாய்
கானிருக்கும் தனிமரமாய்க் கதி ஒன்றின்றிக்
கலங்கி அழ விட்டேகி விட்டாய் நன்றோ?
வானிருக்கும் ஈசன்தான் கூடி விட்டாய்
வாழ்வினிலே உனை என்றும் மறவேன் நானே

நித்தமும் உம் நினைவலைகளுடன் வாழும்,
பரமானந்தம் குடும்பத்தினர்.
(அருமை அக்கா, அத்தான், மருமக்கள்)

68, அரசடி வீதி,
ஆனைக்கோட்டை. (30981)

## உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### வெற்றிடம்

சங்கத்தால் கீழ்வரும் பதவிக்கு பொருத்தமானவரை தேர்வு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


1. பதவி:
   டிராக்டர் சாரதி (தற்காலிகம்)
2. சம்பளம்:
   805 — 1260
   25X7 — 35X8 (குறியீடு இல. 165/88/13)
   இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.
3. வயதெல்லை:
   01 — 05 - 1994இல் 25இற்கும் 45இற்கும் இடையில் இருத்தல் வேண்டும்.
4. தகைமைகள்:
   1. எட்டாந்தரத்தில் சித்தி
   2. டிராக்டரும், டிராக்டர் பெட்டியும் ஓட்டும் சாரதி அனுமதிப் பத்திரம்
   3. லொறி ஓட்டும் சாரதி அனுமதிப் பத்திரம்
5. அனுபவம்:
   டிராக்டர், லொறி ஓட்டுதலில் குறைந்தது 5வருட அனுபவம்.
6. குறிப்பு:
   1. சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   2. மேற்படி பதவி தற்காலிகமானதாகும்.
   3. தேர்வு செய்யப்படுவோர் சங்கத்தால் கோரப்படும் ரொக்கப்பிணை, ஆதனப் பிணை என்பவற்றைச் செலுத்த வேண்டும்.
   4. சிங்களம் பேசத் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்களை முழுப் பெயர், சொந்த முகவரி, பிறந்த திகதி, கல்வி, அனுபவம், சாரதி அனுமதிப் பத்திர இலக்கம் ஆகிய தகவல்களை உள்ளடக்கியதாக சுயமாகத் தயாரித்து 30-05-94ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

- பொதுமுகாமையாளர்,

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி. [சி-8179]

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சே. ஆ. கந்தசாமி

தோற்றம்: 27 — 03 — 1939 மறைவு: 14 — 06 — 1989

திதி: வைகாசி சுக்கிலபக்ஷ ஏகாதசி
21 - 05 - 1994

பண்பும், பாசமும் நிறைந்த அருமைமிகு அப்பாவே! காலமெல்லாம் எங்களை கருத்துடனே வளர்த்தீர்கள் ஐயா! இடைவழியில் எங்களைத் தவிக்க விட்டுத் தனியே ஓடிச் சென்று மறைந்ததன் மாயம் தான் என்னே! ஆண்டுகள் ஐந்து சென்றாலும், உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டு நீங்காதையா.

திருமதி பொற்கொடி கந்தசாமி
குடும்பத்தினர்,

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம். (30993)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லின அழகிய கோழிகளின் அடை முட்டைகள் விற்பனைக்குண்டு. ஹைசேரியன், பிராமா, சில்கி, போலிஸ், சில்வர், பீனரட், பாபடின், பன்டம், பிரீசில், பாமாஸ், வெள்ளடியன் ஊர் கோழிகள் முட்டைகள். "சல்வரி இல்லம்", மேஜர் செல்வராஜா வீதி (மடத்தடி ஒழுங்கை), கோண்டாவில் மேற்கு. (30972)

அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள், பன்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, பருத்திதுறைச் சந்தையடி, நல்லூர். (30843)

காலை மாலை 4 போத்தல் பால் எடுக்கும் யமுனாபாரி ஆடும் கிடாய்க்குட்டியும் Original சனல் யமுனாபாரி ஆடும் குட்டி போடும் தறுவாயில் விற்பனைக்குண்டு. ஆ. கனகசிங்கம், 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (30989)

தும்புத்தடி, தடி விளக்குமாறு முதலியவை தயாரிக்க உகந்த வெற்றுத் தகரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: றோயல் இன்டஸ்றீஸ், பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (சி-8191)

பெயின்ற் வியாபாரிகளின் கவனத்திற்கு எங்களிடம் 100 மி.லீ., 50 மி.லீ. வெற்று டின்கள் உண்டு. தேவையானோர் தொடர்புகொள்ளவும். றோயல் இன்டஸ்றீஸ், பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (சி-8192)

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு உடன் சிரட்டைகள் தேவை. ஆர். வி ஜி. பீடி ஸ்தாபனம், 58, குறுக்குத்தெரு, நல்லூர். (30951)

## கோழிக்குஞ்சு விற்பனை

சிவப்பு, சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. "மல்லிகா பதி", மானிப்பாய். (30977)

## கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல ஓடும் நிலையில் உள்ள ஆடம்பர போர்ட் கப்றில் நவீன கார் பற்றறியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல 48/1. முதலாம் ஒழுங்கை, (ஐங்கரன் விளையாட்டுக்கழக ஒழுங்கை) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (30992)

## வீடு தேவை

மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் தனிவீடு அல்லது அனெக்ஸ் உடன் தேவை. தொடர்புகொள்ளவும்: விக்னராசா, மே/பா நா. செல்வரட்ணம், ஓய்வுபெற்ற ஆசிரியர், கோட்டைக்காடு, ஏழாலை மேற்கு, சுன்னாகம். (7099)

## மணப்பெண்கள் தேவை

கௌரவமான குடும்பப் பெற்றோர் வயது 82, அனுஷம் லக்கினத்தில் செவ்வாய் Holland Engineer ஆக தொழில் புரிபவர் வயது 36, புனர்பூசம் (3), 4இல் செவ்வாய் Zambiaவில் Engineer தொழில் புரிபவர் படித்த பட்டதாரி அழகிய மணப் பெண்கள் தேவை. M. Rajenthirem, Kopay South, (Near Navalar School). (30970)

## மணமகன் தேவை

இந்து சமய 42 வயது, மகம் 1ஆம் பாதம், கருத்த செழுத்த, நட்டெழுத்து படித்த மணமகளுக்கு அரசாங்க உத்தியோகம் அல்லது சொந்த வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. இல. 938, உதயன் மே/பா (7397)

இந்து, 29 வயது, செவ்வாய்க்குற்றமற்ற திருவோண நட்சத்திரப் பெண்ணுக்கு ஆசிரியர். வங்கி, கணக்காளர், அளவையாளர், தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் மணமகன் தேவை. குறிப்புடன் தொடர்பு: திருமணசேவை 75, யாழ் வீதி, சாவகச்சேரி. (7402)

மிருகசீரிடம், 2ஆம் பாதம், 27 வயதுடைய பெண்ணுக்கு உள்ளூரில் தொழில்புரியும் அல்லது அரசாங்க தொழில் செய்யும் மணமகன் தேவை. 642, மே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (30916)

## தவறிவிட்டது

18-5-94 இரவு கந்தர்மடத்திலிருந்து பாங்சால் வீதிக்குப் போகும் வழியில் ஆண்களுக்கான மணி பேர்ஸ் (கறுப்பு நிறம்) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆனந்தி புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (30976)

## திருமண சேவை

உள்நாடு, வெளிநாடு, ஆண், பெண் ஜாதகம் உள்ளவர்கள் உடனடியாக எம்மிடம் தொடர்புகொள்க! அபிராமி, துர்க்காதேவி தேவஸ்தான வீதி, சாவகச்சேரி. (30986)

## மணமகள் தேவை

ரேவதி 8 பாவம், 30 வயது, பொருளாதாரமும் தொழிற் கல்வியுடன் யாழ். கம்பனி ஒன்றில் வேலை செய்பவருக்கு 30 வயதுக்குட்பட்ட பெண் தேவை. தொடர்பு: த. இராமநாதன், பென்சனியர், புஸ்பநாதன் வீதி, இணுவில் மேற்கு, இணுவில். (7100)

பிரான்ஸில் வதிவிட வீசா பெற்று தொழில்பார்க்கும் பண்புள்ள இந்து C. T. B. மெக்கானிக் வயது 31, அத்தம், 2இல் செவ்வாய் வாலிபருக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை. குறிப்பு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இரகசியம் பேணப்படும். இல. 643, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (30966)

## A/L மாணவர்களுக்கு

வர்த்தகமும் நிதியும் 1993 (Past Paper with Answer) ஆக்கம்; E. செல்வநாயகம் விலை 30/-. பொருளியல் 1993 (Past Paper with Answer) ஆக்கம்: A சண்முகலிங்கம் B. Com (Hons) விலை 30/-. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8210)

## உத்தியோகத்தர் தேவை

அ. இ. தமிழ்மாமன்றத்தில் வெளிக்கள வேலை செய்வதற்கான பதவி வெற்றிடமாக உள்ளது. தகுதியான இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 31-5-94. முகவரி: அ. இ. தமிழ் மாமன்றம், இருபாலை, கோப்பாய். (7401)

## ராகு கேது மாற்றம்

மே 19 ராகு, கேது மாற்றம் ரூபா 10-. விற்பனையாகின்றது. 24 மணித்தியால மருந்தக சேவை செய்யும் நிறுவனம், பகவான் மருந்தகம், 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (30946)

## வியாபாரிகளே!

வண்ணமிகு பிறந்தநாள், திருமண மற்றும் வாழ்த்து மடல்களை மொத்தமாகக் கொள்வனவு செய்திட வாரீர்! ஆனந்தீஸ் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7398)

## சர்நாடக சங்கீதம்

கைபேடு I ரூபா 10/- கைநூல் ரூபா 15/- 72 மேளகர்த்தா விளக்கம் ரூபா 5/-. மேற்படி பிரதிகள் எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. (7395)

---

# யாழ். வணிகர் கழகம் விடுக்கும்
# முக்கிய அறிவித்தல்

வகுப்புத் தொழிலாளர்களை வைத்து வேலை செய்யும் சகல வணிகப்பெருமக்களினதும் கவனத்திற்கு,

வகுப்புத்தொழிலாளர்களின் தற்பொழுது நடைமுறையில் உள்ள கூலிப் பட்டியலில் இருந்து 50% கூட்டிக் கொடுப்பதாக கடந்த 05 — 04 — 94, 06 — 04 — 94 ஆகிய தினங்களில் நடைபெற்ற கலந்துரையாடலில் தங்களுடன் கலந்துரையாடி ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது.

ஆகவே இன்றைய தினத்தில் இருந்து யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மேற்படி வணிகப் பெருமக்கள் அனைவரும் இதை நடைமுறைப்படுத்தி கழகத்துடன் ஒத்துழைக்குமாறு கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

பொதுச்செயலாளர்
யாழ். வணிகர் கழகம்.

(சி/8228)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11 — 02 — 1976

மறைவு: 31 — 05 — 1993

## செல்வன் சண்முகநாதன் கிரிதரன்

(கிரி)

(சாவ. இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் - கலைப்பிரிவு)

திதி: 21 — 05 — 1994 (ஏகாதசி)

ஆண்டு ஒன்று சென்றாலும்
அழியாது உன் நினைவுகள்
அருயிரே உனை இழந்து
ஆறிடுமா எம் துயரம்
அன்பே உனை மறந்து
அலைகடலின் துரும்பாக
ஆடுகிறோம் உந்தன் நினைவில்
அணையாத தீபமென ஒளிர்வாய் என இருந்தோம்
அரும்பினிலே கிள்ளிய எம்பெருமான்
செயலை என்னவென்போம்
மீண்டு வரும் பிறவியிலும் உறவாட உன்னுடன்
வேண்டுகிறோம் ஆண்டவனை - எம்
அருமைச் செல்வனே!

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா, அக்கா,
அம்மம்மா மற்றும் உறவினர்கள்.

வேரற்கேணி,
கந்தசாமி கோயிலடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(சி-8190)

---

# 9 ஆம் ஆண்டு நினைவலையும் ஓராண்டு நினைவஞ்சலியும்



அமரர்
## க. செல்லையா

(அதிபர் அ. மி. த. க பாடசாலை, அளவெட்டி)

அன்னையின் மடியில்: 05-12-1936
ஆண்டவன் அடியில்: 24-06-1985
திதி: 14-07-1994

திருமதி
## மாசிலாமணி செல்லையா

(பூமலர்)

(ஆசிரியை அ. மி. த. க. பாடசாலை, அளவெட்டி)

அன்னையின் மடியில்: 27-04-1938
ஆண்டவன் அடியில்: 21-05-1993
திதி: 09-06-1994

அன்பின் உருவங்களாக, அறிவுச் சுடர்களாக பண்பின் உறைவிடமாய், விசுவாசமிக்க சேவகர்களாய், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றிற்கு உதாரண புருஷர்களாய் இறுதிவரை வாழ்ந்து காட்டிய எம் அன்புத் தெய்வங்களின் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திப்போம்.

- பிள்ளைகள்.

"திருவேரகம்"
ஆசிரியமணி செல்லையா வீதி,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

(5036)

---

# 8 ஆம் ஆண்டு நிறைவு நினைவுகள்



## செல்வன் குமாரசாமி சர்வானந்தன்

(சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, பழைய உயர்தர வகுப்பு மாணவ முதல்வன்)

தோற்றம்: 1964-04-10

மறைவு: 1986-05-21

மனிதத்தை உன் வாழ்வினில் கண்டோம்,
அன்பை உன் மொழியினில் கண்டோம்
பாசத்தை உன் நடத்தையில் கண்டோம்,
சோகத்தின் ஆழத்தை உன் மரணத்தில் கண்டோம்
நினைவலைகளின் பகிமையை உன் மறைவின் காலத்தில் கண்டோம்.
என்றென்றும் உன் எழிலை, உம் நினைவில் காண்போம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்;

இல: 25, பிறவுண் வீதி,
1ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(30952)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## அன்பளிப்பும் சிரமதானமும்

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டது அங்கு நடக்கும் இராணுவ ஆட்சியை மூடிமறைப்பதற்கான தந்திரோபாய முயற்சி என்பதை இப்பகுதியில் அடிக்கடி வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறோம்:

இராணுவ ஆட்சியின் கொடுமை அங்கு எந்தளவுக்கு கால் ஊன்றியுள்ளது; மக்களின் வாழ்க்கையையும், மனங்களையும் எந்தளவுக்குப் பாதித்துள்ளது என்பதற்குச் சான்று பகரும் விபரத்தில் அடிக்கடி செய்திகளும் வெளியிட்டு வருகிறோம்.

அரசாங்கத் தரப்பில் கூறப்படுவது போல, கிழக்கில் ஜனநாயகத்தை உயிர்ப்பிக்கச் செய்வதற்காகவே உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டது என்றால் —

அங்குள்ள உள்ளூராட்சிச் சபைகள் இயங்கத் தொடங்கிய பின்னர், படை முகாம்களைப் புதிதாகத் திறப்பதும், பழையவற்றை பலப்படுத்துவதும் எதற்காக? கிழக்கில் ''பயங்கரவாதம்'' ஒழிக்கப்பட்டு ''ஜனநாயகம்'' மலர்ந்து விட்ட பிறகு முறைப்படி படை முகாம்களை அகற்றுவதே நியாயம். அப்போதுதான் மக்கள் இராணுவ அடக்குமுறை குறித்த அச்சமோ உணர்வோ இன்றித் தமது வாழ்க்கையைச் சுதந்திரமாக நடத்த முடியும்;

ஆனால் கிழக்கில் ஜனநாயகம் பிழைத்துக் கொண்டதாகவும், மீண்டும் மலர்விக்கப்பட்டுள்ளதாகவும் கூறிக்கொண்டு, இராணுவ அடக்குமுறையை நிலைப்படுத்தவே, நிரந்தரமாக்கவே அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கிழக்குப் பிரதேசத்தில், தமிழர்களின் வாழ்விடங்களில் தனது ''ஜனநாயகம்'' என்பது இராணுவ அடக்குமுறையும் சேர்ந்தது தான் என்ற புதிய கோட்பாட்டைச் சிங்கள அரசாங்கம் கொண்டிருப்பது நன்று புலப்படுகிறது அல்லவா?

மட்டக்களப்பில் தாண்டியடி, காஞ்சிரங்குடா போன்ற பகுதிகளிலும், அம்பாறை மாவட்டத்தின் தம்பிலுவில், திருக்கோவில், விநாயகபுரம் ஆகிய பகுதிகளிலும் அவ்வப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஊதியம் இன்றி இராணுவ முகாம்களில் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதிகள் பலவற்றில் புதிதாக இராணுவ முகாம்களும் காவல் அரண்களும் அமைக்கப்படுகின்றன. அவற்றை அமைக்கத் தேவையான சீமெந்து அல்லது கூரைத் தகடு அல்லது கட்டடத்துக்குத் தேவையான ஏதாவது ஒரு பொருளை கொள்வனவு செய்து அதற்கான கிட்டையுடன் ''அன்பளிப்பு''ச் செய்யுமாறு அப்பகுதி மக்களைப் படையினர் கட்டாயப்படுத்துகிறார்கள்,

அத்தகைய ''அன்பளிப்புகளை'' வழங்குவதற்குப் பண வசதி இல்லை என்று தெரிவிக்கும் மக்கள் கூலி இல்லாமல் வேலை செய்யுமாறு—ஒருவகைச் ''சிரமதானம்'' செய்யுமாறு— கட்டுப்படுத்தப்படுகிறார்கள்!

தமிழர் பகுதியில் ஜனநாயகம் என்பது படையினரின் சுற்றிவளைப்பு, காரணமின்றிக் கைது, காணாமற் போகச் செய்தல், தாக்குதல், சுட்டுக்கொல்லுதல், சித்திரவதை, கற்பழித்தல் என்ற இராணுவ அட்டூழியங்களோடு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை என்றும்—

முன்னர் கூறப்பட்ட 'அன்பளிப்பு' 'சிரமதானம்' என்ற கட்டாயப்படுத்தல் தொல்லைகளும் மற்றும் வாழ்க்கை அழுத்தங்களும் சேர்ந்ததாகவே இருக்கும் என்றும் – அரசு சொல்கிறதா?

பாவம், 'தேர்தல்' மூலம் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாலோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களாலோ இவற்றைத் தடுத்து நிறுத்த முடியுமா? அதற்கான ஜனநாயகப் பலம் அவர்களுக்கு உண்டா? இராணுவ அடக்குமுறையை எதிர்த்து நிற்க முடியுமா அவர்களால்?

இந்த இலட்சணத்தில் தான், கிழக்கிலும் பொதுத் தேர்தலுக்கு ஆயத்தம் செய்யப்படுகிறது. அதில் பங்கு கொள்ள பழைமையான கட்சிகளும் அவசரப்படுகின்றன!

---

யாழ். பிரதேச செயலகங்களுக்கு

# ஒதுக்கப்பட்ட நிதிக்குரிய பணிகள் நடைபெறவில்லை

### பிரதம செயலர் கவலை

யாழ்ப்பாணம், மே 21

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு இவ்வாண்டுக்கென பிரமாண அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்குரிய வேலைகள் நடைபெறுவதாக தெரியவில்லை. வடக்கு–கிழக்கு மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்களுக்கு கடந்த 4ஆம் திகதி அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் இவ்வாண்டுக்கென 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 50 வீத நிதி பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

முதற்கட்ட நிதிக்குரிய வேலைத்திட்டங்கள் இதுவரை மேற்கொள்ளப்படாத பட்சத்தில் மிகுதி 50 வீத நிதியை அனுப்புவது தாமதமாகும் என்றும்— அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழுமையாக வேலைத்திட்டங்களை மேற்கொள்ளாத பட்சத்தில் அடுத்த ஆண்டுக்குரிய பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீடு நிதி குறைக்கப்படும் என்றும் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

## தமிழ் மாவட்டங்களுக்கு அதிகளவு மருந்து வகைகள்

### அனுப்பிவைக்கக் கோரிக்கை

கொழும்பு, மே 21

யாழ்ப்பாணம் உட்பட ஏனைய தமிழ்மாவட்டங்களுக்கு கூடுதல் மருந்துவகைகளை அனுப்பவேண்டும் என்று சுகாதார அமைச்சை அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் வற்புறுத்தியுள்ளனர்.

வடக்கு–கிழக்கு மாகாணத்தில் நோய்கள் அதிகரித்துள்ளதாகவும்—

அவற்றை தடுக்க போதிய மருந்துவகைகள் இல்லை என்றும் —

அங்குள்ள தமது கிளை அலுவலகங்கள் மூலம் தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும்—

கடந்த மாதம் கொழும்பில் நடந்த அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகளின் கூட்டத்தில் அரச சார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்:

அதைத்தொடர்ந்து அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் குழு ஒன்று சுகாதார அமைச்சு செயலாளர் திரு. ஜோ. பெர்னாண்டோவை சந்தித்து போதிய மருந்து வகைகளை அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளதாகவும் தெரியவந்தது.

கூடுதல் மருந்துகளை அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி அளித்ததாக தொண்டர் அமைப்பு பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (த-8)

குற்றச்சாட்டுகளை விசாரிக்க

## லஞ்ச ஆணைக்குழு; அரச எம். பிக்கள் எதிர்ப்பு

தேர்தலுக்கு முன்னர் லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படுவதை சில அமைச்சர்களும், சில அரச எம்.பிக்களும் எதிர்த்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது;

இதேவேளை -- தங்கள்மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ள ராவய மற்றும் சில பத்திரிகைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக இரண்டு சிரேஷ்ட அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இவர்களில் ஒருவர் தாம் இது பற்றி ஜனாதிபதியிடம் தெரிவித்துவிட்டதாகக் கூறியுள்ளார்,

மற்ற அமைச்சரோ தாம் சட்டமா அதிபருடன் ஆலோசனை நடத்தியிருப்பதாகத் தெரிவித்தார். [த-எ]

அரச காணியில் தேக்க மரம் வெட்டிய

## இன்ஸ்பெக்டர்,கான்ஸ்டபிள் இருவரும் பதவி நீக்கம்!

கொழும்பு, மே. 21

சிலாபம் பொலீஸின் தலைமையக இன்ஸ்பெக்டர் அனுரா அபேவிக்கிரமவும் கான்ஸ்டபிள் உபாலி ராஜபக்ஷவும் பொலீஸ்மா அதிபரால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாதம்பையில் உள்ள அரச தேக்கங்காட்டில் சட்ட விரோதமாக 'ஐம்பது தேக்க மரங்களை வெட்டிய சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின் முடிவில் பொலீஸ்மா அதிபர் பிராங்க் டி சில்வா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்று அறிவிக்கப்படுகின்றது. (ஓ-எ-6)

## கொடுப்பனவு

யாழ்ப்பாணம் மே 21

காரைநகர் ப. நோ. கூ. ச கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான மே மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழக்கமபடையில் தற்காலிகமாக இயங்கும் கிராமிய வங்கி காரியாலயத்தில் வைத்து இன்று வழங்கப்படும்.

### புலிகளின் குரல் வானொலியில்

21 – 05 – 1994

சனி இரவு

- ★ 8-01 — அறிவியற்களஞ்சியம்
- ★ 8-10 — தாயகப் பாடல்கள்
- ★ 8-25 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — வைப்பிலன்ட் வாசன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''மரணமோர் புதுப்பிறப்பு''

22 – 05 – 1994

ஞாயிறு காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## கலை நிகழ்ச்சி, பரிசளிப்பு

மயிலணி, மே, 21

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நாற்பதாண்டு நிறைவை ஒட்டிய மாணவர் கலைநிகழ்ச்சி, பரிசளிப்பு, கௌரவிப்பு, விழா வீடியோப்படக்காட்சி ஆகியன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனும் திருமதி. செங்கமலம் தெய்வேந்திரனும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள். (க-89)

## மாவீரர் நினைவுக் கூட்டம்

வடமராட்சி மே 21

பருத்தித்துறை வட்டத்தில் வைகாசி மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவுக் கூட்டம் இன்று சனிக்கிழமை புலோலி குரும்பைகட்டிசனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிகோட்டத்தலை அரசியல் பொறுப்பாளர் திரு. தயா தலைமையில் நினைவுக் கூட்டம் நடைபெறும். (த-173)

சமாதான தீர்வுமுறை குறித்த

## பயிற்சிப் பட்டறையில் மங்கள பங்குபற்றுவார்

கொழும்பு, மே 21

இனங்கள் மற்றும் நாடுகளுக்கு இடையேயான மோதல்களை பேச்சுகள் மூலம் சமாதானமாகத் தீர்த்து வைக்கும் முறைகள் பற்றிய பயிற்சிப் பட்டறை ஒன்றில் கலந்து கொள்ள இலங்கையின் சார்பில் சுதந்திரக் கட்சி எம்பியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவருமான மங்கள முனசிங்கா அழைக்கப்பட்டிருக்கிறார்.

ஆறு தெற்காசிய நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 24 எம்.பிக்கள் இப் பட்டறையில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் திரு. மங்கள முனசிங்க ஆவார்.

## நாம் பதவிக்கு வந்தால் 4 மாதங்களில் தீர்வு

### பொ. ஐ. மு. செயலர் சொல்கிறார்

கொழும்பு, மே 21

நாம் ஆட்சிக்கு வந்தால் மூன்று அல்லது நான்கு மாதகாலத்துக்குள் வடபகுதி தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். வடபகுதியில் பயங்கரவாதமே நிலவுவதாகக் கூறி யுத்தத்துக்காக வீண் செலவு செய்யப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டி. எம். ஜெயரட்ண இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி கம்பளை வெலபெனத்த விகார மண்டபத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடபகுதி மக்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். தமிழ் மொழிக்கும் உரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையே ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கு எமது கட்சி தீர்மானித்துள்ளது. அதனால் அவரின் தலைமையின் கீழ் பெரும்பான்மை மக்கள் மட்டுமல்ல சிறுபான்மை மக்களும் சகல உரிமைகளையும் பெறவேண்டும் என்பதே எமது அபிலாசையாகும்.

அதற்கேற்ற வகையில் நாம் வடபகுதி மக்களின் பிரதிநிதிகளுடனும், மலையக மக்களின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம் — இவ்வாறு திரு. ஜெயரட்ண மேலும் தெரிவித்தார். (த-5)

## இசையாராதனை

யாழ்ப்பாணம், மே. 21

ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மிருத்திகா - பிருந்தாவன இசையாராதனை நாளை ஞாயிறு மாலை 4-30 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மிருத்திகா பிருந்தாவனத்தில் நடைபெறும்.

இசையாராதனையில் சங்கீத பூஷணம் வி. சிவஞானசேகரம் பாடுவார். (த)

## தகவல் தந்தால் ரூபா ஒரு லட்சம்!

மாத்தளை மாநகரசபை உறுப்பினர்ரஸ்மர் ஹுசேனின் கொலை தொடர்பாக முக்கிய தகவல்களைத்தருபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்றுஇரகசியப் பொலீஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (உ-எ-6)

### திருக்கேதீச்சர வழிபாடு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் வேண்டுகோளின்படி யாழ். இந்துக் கல்லூரி சந்தி மெய்கண்டதேவர் ஆதீனத்தில் ஞாயிறு தோறும் காலை 9மணிக்கு திருக்கேதீச்சர வழிபாடு நிகழும். (த)

---

கொழும்பு அரசியலை 'எரிமலை'யாக்கிய

# 'பாதாள' உலகின் தலைவனான 'சொத்தி' உபாலி

# ஐ.தே.கவின் அன்றைய நாயகன்! இன்று வில்லன்!!

கடந்த வாரம் ஒரு நாள்... அன்று வாராந்த அமைச்சரவைக் கூட்டம்......

ஜனாதிபதி செயலகம் பரபரப்புடன் காணப்படுகிறது: அமைச்சர்கள் ஒருவர்பின் ஒருவராக வந்து கொண்டிருக்கின்றனர்.

அமைச்சர் கூரே வருகிறார் பல அமைச்சர்கள் அவரைக் கண்டும் காணாதது போல விலகி நிற்கின்றனர்.

அவருடைய கொழும்பு வீடுகளில் ஒன்று முதல் நள் இரவுதான் பொலீஸாரின் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தது. அதனால் ஏற்பட்ட ஆத்திரம் கூரேயின் முகத்திலும் நடையிலும் காணப்படுகிறது.

''புயலுக்கு முன் அமைதி'' என்ற சூழ்நிலையில் அமைச்சரவைக் கூட்டம் ஆரம்பமாகிறது.

ஜனாதிபதி விஜேதுங்க தலைமை வகிக்கிறார். சிறிது நேரத்தில் அமைச்சர் கூரே சூடாகின்றார். 'நெருப்பைக் கக்குமாற்' போல பேச ஆரம்பிக்கின்றார்.

யார் இந்த சொத்திஉபாலி? —எடுத்த எடுப்பிலேயே கூரே கேட்கிறார்.

ஐக்கிய தேசியக்கட்சிப் 'பையன்களில்' ஒருவர் தான் உபாலி. 1988இல் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை வெற்றிகரமாக நடத்தத் தோள் கொடுத்தவர்களில் முக்கியமானவர்தான் உபாலி;

கூரேயின் இந்த நிலைப்பாட்டை அமைச்சர் வீரசிங்கமல்லிமாரச்சி ஆதரிக்கின்றார்.

ஜனாதிபதி விஜேதுங்க பதிலடி கொடுப்பார் என்று ஏனைய அமைச்சர்கள் எதிர்பார்க்க, அவரோ அமைதியாக இருக்கிறார்;

### உபாலியின் வளர்ச்சி

கொழும்பு அரசியலிலும் கட்சிக்குள் பெரும் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ள 'சொத்தி' உபாலி அரசியலில் இவ்வளவு சக்தி மிக்கவராக எப்படி உருவானார்? உருவாக்கப்பட்டாரா அல்லது தானாக தன்னை வளர்த்துக் கொண்டாரா?

1988ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இடம்பெற்ற அரசியல் நிகழ்வுகள் இக் கேள்விகளுக்கான பதில்களாக அமைகின்றன.

பொரளையில் உள்ள சினிமா படமாளிகை ஒன்றில் 'டிக்கற்'விற்பவராக தமது வாழ்க்கையை ஆரம்பித்தவர் உபாலி. பின்னர் ஐ. தே. கவில் சேர்ந்து அரசியலில் ஈடுபட்டார். அத்துடன் பாதாள உலகத் தொடர்புகளையும் அவர் வளர்த்துக் கொண்டார்.

அரசியல்வாதிகளின் 'கன்ஜாடை'யை புரிந்து கொண்டு அதனை 'காரியமாக்குவதில்' சமர்த்தரானார் உபாலி. இது உபாலியை ஐ. தே. கட்சியின் முன்னணிக்குக் கொண்டு வந்தது. இதன்காரணமாக உபாலி மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் நெருங்கிய சகாவானார்.

### பிரேமா ஜனாதிபதியாக வர 'பாடுபட்டு' உழைத்தவர்

1988 ஜனாதிபதித் தேர்தலில்...

1988 ஜனாதிபதித் தேர்தல் வந்தது. ஜே. வி. பியின் தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக அரசியல் வாதிகள் தென் பகுதியில் தலைகாட்ட முடியாத நிலை அப்போது ஏற்பட்டது. தேர்தல் பிரசாரங்களை ஒழுங்கு செய்வதற்கு, சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு கட்சிக்கு ஆள் தேவைப்பட்டது, அந்தச்சமயத்தில் உபாலி கட்சிக்குக்கைகொடுத்து உதவினார்.



சொத்தி உபாலி

பிரேமதாஸாவின் படம் அச்சடிக்கப்பட்ட சுவரொட்டிகளை நாடு முழுவதும் ஒட்டும் வேலையை ஐக்கிய தேசியக்கட்சி உபாலியிடம் ஒப்படைத்தது.

தனக்கு இட்ட பொறுப்பை உபாலி தமது 'பாதாள உலகு'க் குழுவினரைக் கொண்டு சொல்லுக்குச் சொல் நிறைவேற்றினார்.

பிரேமதாஸா ஜனாதிபதியாகவும் பதவியேற்றார். உபாலிக்கு தனது நன்றிக்கடனை பிரேமதாஸா செலுத்தினார் எப்படி?

ஐ. தே. கவின் தேசியச் செயற்குழு, அக்கட்சியின் கொள்கைகளை வகுக்கும் முக்கிய அமைப்பாகும். இக்குழுவில்—கட்சிப் பிரதிநிதிகளால், கட்சியின் வருடாந்த மாநாட்டில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுடன், ஜனாதிபதி கட்சித் தலைவர் என்ற முறையில் தமது சொந்த விருப்பத்தில் நியமிக்கும் மேலும் 50 பேரும் உறுப்பினர்களாக இடம் பெறுவர்.

இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸா 'சொத்தி' உபாலியை கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினராக நியமித்தார். இப்படி 'சொத்தி' உபாலிக்கு அகில இலங்கை அரசியல்வாதி என்ற அங்கீகாரம் கிடைத்தது.

பிரேமதாஸா இந்த நியமனத்தைச் செய்த போது தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்கா உட்பட அமைச்சர்கள் எவரும் அதனை எதிர்க்கவில்லை. காரணம் உபாலி - பிரேமதாஸாவுடன் வைத்திருந்த நெருக்கமான தொடர்பு என்று கூறப்படுகிறது,

தென்பகுதியில் ஜே. வி. பியின் தீவிரவாத நடவடிக்கைகள் அடக்கப்பட்ட விதம் நாடறிந்த ஒன்றாகும்.

ஜே. வி. பியின் தீவிரவாதச் செயல்கள் ஒருபுறம் — ஆறுகள், குளங்கள், வீதி ஓரங்களில் கைகள் பின்பக்கத்தில் கட்டப்பட்ட நிலையில், டயர் போட்டு எரிக்கப்பட்ட நிலையில் மனித சடலங்கள், காணாமற் போனவர்கள் மறுபுறமாக தென் இலங்கை சீரழிந்தது.

இவற்றின் பின்னால் இயங்குபவர்கள் யார்? கறுப்புப் பூனைகளா? என்ற கேள்விகள் எழுந்தன. அக் கேள்விகளுக்கு விடைகாணுவதற்கு முன்னர் தென் இலங்கைத் தீவிரவாதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

''இப்படியான இருண்ட காலத்தில் கட்சியைக் காப்பாற்றியவர்களை நடுத்தெருவில் கைவிடலாமா?'' — இப்படி அமைச்சர் சிறிசேனகூரே பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

'பாதாள உலக' மரணப் படை ஒன்றின் தலைவர் என்று கருதப்படும் சொத்தி உபாலி எந்த விதமாகச் செயல்பட்டு கட்சியைக் காப்பாற்றி இருக்கலாம் என்று கொழும்பில் உள்ள எதிரணி அரசியல்வாதிகள் கேட்கின்றனர்.

### இருண்ட யுகத்தில் கட்சியை காப்பாற்ற உதவியவர்!

அன்று கதாநாயகன் இன்று வில்லன்

இப்படி 'பாதாள உலக' கதாநாயகனாக இருந்து கொண்டு உதவியவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 'வில்லனாக' மாறியது எப்போது என்ற கேள்வி எழுகின்றது.

ரிசர்வ் பொலீஸ் சப்இன்ஸ்பெக்டரான உபாலி தமது மெய்ப்பாதுகாவலராக பணியாற்றியதுஇல்லை என்று அமைச்சர் கூரே கூறிவருகின்றார்.

காமினி திஸநாயக்காவை எம்பியாக்க எடுத்த முயற்சியை முறியடிக்க சிறிசேன கூரே பல வழிகளில் செயற்பட்டார்.

தேசியப் பட்டியல் எம்பிக்கள் சிலர் இராஜினாமாச் செய்ய முன்வந்த போது அனாமதேய தொலைபேசிப் பயமுறுத்தல்களும் கொலைப் பயமுறுத்தல்களும் அவர்களை அப்படிச் செய்யவிடாது தடுத்தன. அதன்பின்னணியில் உபாலி செயல்பட்டுள்ளார் என்ற சந்தேகம் அரசுத்தலைமைக்கு ஏற்பட்டதை அடுத்தே உபாலியைக் கைது செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

1988 ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாஸவின் செல்லப்பிள்ளையாக, செயல்பட்ட உபாலி—

இன்று சமாதான நீதவான் ஒரு அமைச்சரின் 'கையாளாக' செயல்படுகின்றார் என்று ஜனாதிபதி விஜேதுங்க கருதியதை அடுத்தே—இன்று கட்சியின் வில்லனாக மாறியிருக்கின்றார்.

இன்று அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் ''கம்பி'' எண்ணிக் கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினரான 'சொத்தி' உபாலி விவகாரம் ஐக்கிய தேசியக் கட்சியை ஓர் எரிமலையாக்கி இருக்கிறது. அது வெடிக்கும் போது கட்சிக்குள் கடந்த 17 ஆண்டுகளாக புதைந்து கிடக்கும் பிரேமதாஸா அரசு காலத்து 'சங்கதிகள்' பல வெளியே வரத்தான் போகின்றன என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றன. (ஓ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா நல்லையா

(உரிமையாளர் கமலா ஸ்ருடியோ கிளிநொச்சி)

மட்டுவிலை பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா நல்லையா காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும், பிறேம்நாத், திருமதி மாலா குகதாசன் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), திருமதி கலா யோகேந்திரன் (கட்டட திணைக்களம் கொக்குவில்), திருமதி சுதா சிவஞானம், ரகுநாத் (மொறிட்டுவ பீடம் 1 ஆம் வருடம் பேராதனைப் பல்கலைக்கழகம்) கோபிநாத் (மாணவன் கனகபுர மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி, யோகேந்திரன் (இரசாயனப் பகுதி யாழ். பல்கலைக்கழகம்), குகதாசன் (தொழில் நுட்பவியலாளர்), சிவஞானம் (ஆசிரியர் கிளிநொச்சி) ஆகியோரின் மாமனாரும், அபிராமி, பகீரதி, சகீரதா, தர்சிகா, வருணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 22-5-94 ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் 8 A, கட்டி அம்மன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. யோகேந்திரன்
(மருமகன்)

8 A, கட்டி அம்மன் வீதி,
கொக்குவில். (31000)

## ஆறுமுகசாமி குலசிங்கம்

(பொறுப்பாளர் - உதயம் பல்பொருள் அங்காடி)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி வீதியினை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஆறுமுகசாமி குலசிங்கம் 19-05-1993 இல் காலமானார்.

அன்னார் ஆறுமுகசாமி இராசம்மாவின் அன்பு மகனும், சறோஜினிதேவியின் (கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை) அன்புக் கணவரும், நிரஞ்சன், நிசாந்தன், விமல் ஆகியோரின் அன்புத் தந்தையும், சறோஜாதேவி, சகுந்தலாதேவி, பாலசிங்கம் (கனடா) இராஜசிங்கம் (லங்கா சிமெந்து லிமிடெட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசையா — தங்கமணியின் மருமகனும், தவராஜா (U.K.), சிவகுமார் (U.K.), விக்கினேஸ்வரன் (U.K.), ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொக்குவிலிலுள்ள அன்னாரது இல்லத்தில் 20-05-1994 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி சறோஜினிதேவி குலசிங்கம்

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில். (30999)

## ஜெயம் செபஸ்ரியன் வேந்தக்கோன்

ஜெயம் செபஸ்ரியன் வேந்தக்கோன் அவர்கள் 16-5-94 இல் கொழும்பு கொட்டாஞ்சேனையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேந்தக்கோன் — லூர்து அவர்களின் அன்பு மகனும், நிமோவின் அன்புக் கணவரும், திவ்வியா, டிலானோ, அஞ்சலோ ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்வராஜா ஜோசப் — மகிழ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும், அன்ரனற் (U.K.), அஞ்சலா (செல்வம்), சோமன் (U.K.), யோகன் (U.K.), ஆன் (பபா - U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பொன்கலன் (U.K.), சித்திரா (U.K.), மஞ்சு, ஜெயா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19-05-94 இல் கொட்டாஞ்சேனையில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நவமணி முத்தையா

(31006)

## கந்தசாமி நவமலர் (மலர்)

சங்கானை காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி நவமலர் அவர்கள் 19-05-1994 இல் காலமானார்.

இவர் சிதம்பரப்பிள்ளை - நவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், கந்தசாமியின் அன்பு மனைவியும், மதுரா, இராகுலன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சந்திரராஜா (பிரான்ஸ்), குலேந்திரராஜா (லண்டன்), ஜெயசாந்தினி (மாணவி யாழ் தொழில் நுட்பக் கல்லூரி), சுதா (மாணவி, யூனியன் கல்லூரி), ஆகியோரின் அருமைச் சகோதரியும், ஜெயந்தன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மைத்துனியும், கார்த்திகா (பிரான்ஸ்) வின் அருமைப் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-05-1994 (சனிக்கிழமை) நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கிளாவெளி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ சிதம்பரப்பிள்ளை
(தகப்பன்)

காளி கோவிலடி,
சங்கானை. (31003)

## அப்பாக்குட்டி தர்மலிங்கம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

அராலி வடக்கைச் சேர்ந்த அப்பாக்குட்டி தர்மலிங்கம் கனடாவில் 19-05 94 இல் காலமானார்

இவர் தர்மபாலா (கனடா), தர்மநாயகி (தாவடி) தர்மஜெயந்தி (இங்கிலாந்து), ஜெயபாலா (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும் அப்பாக்குட்டி குணரெட்ணம் அவர்களின் (அராலி வடக்கு) அன்புச் சகோதரரும், க. விநாயகமூர்த்தியின் அன்பு மாமனாருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
க. விநாயகமூர்த்தி

தாவடி தெற்கு,
கொக்குவில். (8198)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21 05 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# மேயர் பதவியிலிருந்து ராஜபக்ஷ நீக்கம்

கொழும்பு, மே 21

கொழும்பு மாநகர மேஜர் பதவியில் இருந்து திரு. ரட்ண சிறி ராஜபக்ஷ விலக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் மீது சுமத்தப்பட்ட முறைகேடுகளை விசாரணை செய்ய மேல் மாகாண சபை தனிநபர் ஆணையாளர் ஒருவரை நியமித்திருந்தது. முன்னாள் நீதியரசர் ஓ. எஸ். எம். செனவிரத்தினா தனிநபர் ஆணையாளராக நடத்திய விசாரணையின்போது முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா திரு. ராஜபக்ஷவுக்கு ஆதரவாக சாட்சியமளித்தார்.

விசாரணை முடியும் வரை திரு. ராஜபக்ஷ மேஜர் பதவியில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்.

விசாரணையின் முடிவில் அவர் மேஜர் பதவியில் இருந்து அகற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தீர்ப்பை எதிர்த்து நீதிமன்றத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்போவதாக திரு. ராஜபக்ஷா அறிவித்திருக்கிறார். (இ-எ)

## யோகாசன போட்டி பரிசளிப்பு

சண்டிக்குளி வடக்கு சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட யோகாசனப் போட்டிப் பரிசளிப்பு விழா இன்று இரவு 7 மணிக்கு நிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண வட்டவைப் பொறுப்பாளர் திரு. செந்தமிழன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பரிசளிப்பைத் தொடர்ந்து "சிலம்பு" காப்பிய நாடகம் இடம்பெறும். (இ-த)

## இன்று

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டி இன்று சனி பிற்பகல் 1 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கோட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும். (த)

கைதாகிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பது மக்களுக்குச் செய்யும் துரோகம் என்றும் —

பொலிஸாருக்கு எஞ்சியிருக்கும் கௌரவத்தையும் அகற்ற இது வழிவகுத்துள்ளது என்றும் — தெரிவிக்கப்படுகிறது (இ-எ-6)

## அனித்தா பயிற்சி நிலையம்

★ Stocking Net

| | |
|---|---|
| ★ Sugar Craft | ★ Facial |
| ★ Bridal Makeup | ★ Needle Work |
| ★ Cookery | ★ Cake Icing |
| ★ Hair Style | ★ Flower Making |

வகுப்புக்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

புதிய டிப்ளோமா வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன.

PAVALAM SIVASUBRAMANIAM

பூநாறி மரத்தடி, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(இ-8126)

காங்கேயன்துறை

## இளந்தமிழர் மன்றத்தின் தமிழ்மகன் பெருவிழாவும் 46 ஆவது ஆண்டு விழாவும்

காலம்: இன்று (21 05 94) சனிக்கிழமை
நாளை (22-05-94) ஞாயிற்றுக்கிழமை இரவு 7-00 மணி.

இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம்
மருதனார்மடம்,

### முதல் நாள் நிகழ்ச்சிகள் (21-05-94)

* கவியாங்கு
  "இவரை நினைந்தெழுந்தால் இம முகம் தாழாதோ?"
* சொர்போர்
  "இராவன் அணக்கேட்ட உச்சமுறச் சத்தரிக்கும் பாடல இதுவன்றோபார்"
* வழக்குரை மன்று
  "கம்பநாட்டாழ்வான குற்றவாளி"
* நாடகம்
  "இராவணன்"

### இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் (22-05-94)

* புலமைப் பரிசில் வழங்கல்
  நாட்டுப் பற்றாளர் அமரர் நா. கருணைநந்தசிவம் நினைவாக
* பட்டிமன்றம்
  "கம்பராமன் நடந்த வழி செந்தமிழர் குறள வழிய"
* நாட்டிய நடகம்
  'தென்றலே மெல்ல வீசு"
* நாடகம்
  "நடுகல்"

— இளந்தமிழர் மன்றம்

(இ-30991)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ராரிஸ் விளையாட்டுக் கழகம் எ. எஸ். பேரம்பலம் சகநிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

இன்று

★ 8.30 மணி:- ஜொனியன்ஸ் வி. க. அணி எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி. க. "பி" அணி.

★ பிற்பகல் 1.00 மணி:- ஷப்றா வி. க. அணி எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி. க. "ஏ" அணி.

நாளை

★ காலை 8.30:- ஜொலிஸ்ராரிஸ் வி. க. நீல அணி எதிர் யாழ். பல்கலைக் கழக அணி

★ பிற்பகல் 1.00 மணி:- ஓல்ட் கோல்ட்ஸ் அணி எதிர் வீனஸ் வி. க. அணி

இச்சுற்றுப் போட்டியின் மற்றோர் ஆட்டம் நாளை காலை 8 30 மணி முதல் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும் இவ்வாட்டத்தில் ஸ்கந்தா ஐக்கிய வி. க. அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் வி. க. இணி மோதும். (உ)

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகுகின்றது. இன்று பிற்பகல் 3.30 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு;-

அத்தியரர் இந்துவில்

★ 17 வயதுப் பிரிவு:- யாழ். மத்திய கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி

★ 19 வயதுப் பிரிவு:- மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா எதிர் புத்தூர் சோமஸ்கந்தா மற்றும் யாழ். மத்திய கல்லூரி எதிர் அச்சுவேலி ம. வி.

முத்துத்தம்பி ம. வி. யில்

★ 17 வயதுப் பிரிவு:- யூனியன் கல்லூரி எதிர் வைரத்தினம் ம. ம. வி.

★ 19 வயதுப் பிரிவு:- சென் ஜோன்ஸ் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி. (உ)

★ ★ ★

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் இணுவிலில் உள்ள மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடக்கும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.00 - சத்தியா வி க. அணி எதிர் பொற்பதி வி. க. அணி.

★ 4 00 - ஞானமுருகன் வி. க. அணி எதிர் மங்றோயல் வி க. அணி. (இ-3-20)

வரவு......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செலவுத்திட்டம் ஒன்றை சமர்ப்பிக்கும் சுமையை அடுத்த அரசாங்கத்தின் மீது சுமத்துவது நியாயமாகாது" என்றார்.

"மேதினத்தில் அரசு அறிவித்த குட்டி பட்ஜட் நிவாரணங்களினால் ஏற்படும் செலவினத்தை சமாளிக்கும் சுமையை அடுத்த அரசின் மீது நீங்கள் சுமத்துகின்றீர்கள்" — என்றும் அவர் கூறினார்.

அதற்கு டாக்டர் விமல் விக்கிரமசிங்கா, 1995 பெப்ரவரி மாதத்தில் ஐ. தே. க அரசு தான் புதிய வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் என்று பதிலளித்தார்.

இவ்வாண்டின் இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் காரணமாகவே புதிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. (இ-எ)

பொன்னலை..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 4 மணிக்கு கட்டுமரம் ஒன்றில் கடற்றொழிலுக்கு சென்ற நாம் கடலில் வலை பாயும்போது, காங்கேசன்துறைப்பக்கமாக இருந்துவந்த ஒரு பாரா படகும், பாரிய பீரங்கிப் படகும் எம்மை நோக்கி தாக்குதலை மேற்கொண்டன.

கட்டுமரத்தில் இருந்த மூவரும் கடலில் பாய்ந்து நீந்தத் தொடங்கினோம்

எமது கட்டுமரம் பீரங்கிக் குண்டுகளின் தாக்குதலினால் சிதறியது.

நீந்திக் கொண்டிருந்த எம்மில் ஒருவரான நவரத்தினம் "முருகா" என்று சத்தமிட்டவாறு கடலில் மூழ்கினார். சுமார் 15 நிமிடங்களின் பின் இறந்தவரை கரைசேர்த்...

O'L பரீட்சை பெறுபேறுகளால் உயர்கல்வியைத் தொடரமுடியாத உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

O/L DAY CLASS

(காலை 8.00 – பிற்பகல் 1.00)

★ மேலும் சிறிதளவு மாணவர்க்கு மட்டுமே இடம் வழங்கப்படும்.

★ காலம் தாழ்த்தாமல் உங்கள் இடங்களை உறுதிப்படுத்துங்கள்.

21 வருடங்களுக்கு மேலான இணையற்ற சேவையில் உயர்ந்த நிகரற்ற நிறுவனம்

ESTD:-1973 REGD:- No J/7993

The Express Institute

IRUPALAI - KOPAY

[30997]

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை குலசேகரம்பிள்ளை

20-5-94 உதயனில் வெளிவந்த காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை குலசேகரம்பிள்ளையின் இறுதிக்கிரியைகள் இன்று 21-5-94 பிற்பகல் 13 ஆம் கட்டைபடி விசுவமடுவிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விசுவமடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
செ. கோடிலிங்கம்

பண்ணாகம்,
சுழிபுரம். (30998)

## வீரகத்தி விவேகலிங்கம்

வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகவும், உபயகதிர்காமம் பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்டவருமான வீரகத்தி விவேகலிங்கம் 1994-05-20 இல் காலை 6.00 மணியளவில் காலமானார்.

இவர் வீரகத்தி காலஞ்சென்ற நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தர்மலிங்கம், ஜெயலிங்கம், இந்திரலிங்கம், குணலிங்கம், இராஜலிங்கம், தர்மராணி, விஸ்வராணி, ஜெயராணி, இந்திராணி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயசிங்கம், தவஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தர்மிந்தன், சுபாங்கினி ஆகியோரின் மாமனாரும், கௌரிகாவின் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1994-05-21 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

உபயகதிர்காமம்,
பருத்தித்துறை. (7404)

திருமதி.

## இரத்தினேஸ்வரி கோபாலசிங்கம்

19-05-94 உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மரண அறிவித்தலின் படி குமரகோட்டம் கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி இரத்தினேஸ்வரி கோபாலசிங்கம் அவர்களின் இறுதிக் கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்று நடைபெறவில்லை. அக்கிரியைகள் இன்று 21-05-94 காலை 9 00 மணி அளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

தகவல்:-
சொ. கோபாலசிங்கம்
(கணவன்)

(31009) [கரும்புத்தோட்டம், ஸ்கந்தபுரம்]

## திருமதி. நல்லதம்பி பொன்னம்மா

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பலகாடு, காரைநகரில் வசித்தவருமான திருமதி நல்லதம்பி பொன்னம்மா அவர்கள் பணிக்கர் வளவு, திருநெல்வேலியில் உள்ள இல்லத்தில் சிவபதம் எய்தினார்.

அன்னார் நல்லதம்பியின் அன்பு மனைவியும், பரமசிவம் (அதிபர், யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்), உருத்திரசிவம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், புத்தளம்) ஆகியோரின் அன்புத் தயாரும், நகுலேஸ்வரி, சுபத்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவமயூரா, சிவசித்துஜா, துஸ்யந்தி, இந்திரஜித், நிருஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவ ர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 22-05-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ந. பரமசிவம்
(மகன்)

(31012)

## அக்னெஸ் றோஸ் பொன்மணி

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சில்லாலையைச் சேர்ந்தவரும், இடம் பெயர்ந்து 37, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான அக்னெஸ் றோஸ் பொன்மணி காலமானார்.

இவர் மேரி யோசப்பின் அன்பு மனைவியும், வசந்தி, சறோ, அன்ரன், றூபி, காலம்சென்ற சுகுணராஜா, ஆகியோரின் அன்புத்தாயாரும், யோகராஜா, இம்மானுவேல், சாந்தினி, குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், மனுவேற்பிள்ளை, காலம்சென்றவர்களான தம்பிராஜா, ஞானப்பிரகாசம், மரியமலர், மேரி திரேசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், லீலி, மேரி மெகடலீன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுகூர்ந்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மேரி யோசப்
(கணவன்)

37, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (31011)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org